## நெல்லிக்குப்பம் நகராட்சி

### நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2018—ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12—ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : — திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**மன்றபொருள். 1.** நெல்லிக்குப்பம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் (திடக்கழிவு மேலாண்மை திட்டம்) 2016-17ன் கீழ் தீர்மான எண். 49 நாள். 30.03.2017 படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறை உத்திரவு ந.க.எண். 30362/2016/P3 நாள்.16.02.2017 மற்றும் திருத்திய நிர்வாக அனுமதி செயல் முறை ந.க..எண். 11088—3 /2017/ P 3 நாள். 24.05.2017ன் படியும், மதிப்பீட்டு ரூ. 90.25 லட்சத்திற்கும் மற்றும் ரூ. 46.00 லட்சத்திற்கும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 23.08.2017 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நகர மன்ற தீர்மான எண். 180, 181 நாள் . 09.10.2017 ஒப்பந்தபுள்ளிக்கான அனுமதி பெறப்பட்டு 19.10.2017 அன்று முறையே பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மண்டல செயற் பொறியாளர் ஆய்வில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின் படி இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு பதிலாக திருச்சிராப்பள்ளி வேலூர் மாநகராட்சிகளில் வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழான Micro Composting Centre அமைத்து மக்கும் குப்பைகளை அரைத்து உரம் தயார் செய்யவும் மக்காத குப்பைகள் , எதற்கும் பயன்படாத குப்பைகளை கழிவு அகற்றம் செய்யவும் வேண்டிய பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கும், பணியை மேற்கொள்வதற்கும் கீழ் கண்ட விவரப்படி திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரனை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | முதல் நிலை சேகரிப்பு பணிக்கு 85 எண்ணிக்கை தள்ளு வண்டி வாங்கும் பணி | 17.00 | பணி முடிக்கப்பட்டது |
| 2 | மேல்பாதி உரக்கிடகில் 5 TPD Micro Composting Centre அமைக்கும் பணி, உரக்கிடங்கில் சுற்று சுவர் , தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 82.50 | |
| 3 | ஆரோக்கியசாமி தெரு உரக்கிடங்கில் 5 TPD Micro Composting Centre அமைக்கும் பணி | 61.00 | |
| 4 | தகவல் தொழில் நுட்பம் , கல்வி மற்றும் விளப்பர பிரிவு | 4.75 | |
| | மொத்தம் | 164.75 | |

அலுவலக குறிப்பு;—1. மன்றம் அனுமதிக்கலாம்.

2,அரசு ஒதுக்கீடு தொகை போக மீதத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2023/2016/இ1

**தீர்மான எண் : 83 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள். 2.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி (IGFF) 2014 – 2015 ஆம் ஆண்டுக்கு அண்ணாநகரில் துப்புரவு பணியாளருக்கு 36 எண்ணிக்கை குடியிருப்பு வளாகம் கட்டும் பணிக்கு ரூ . 200 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண் 15622/2014/LA3 நாள் 28/05/2014 படியும் நகர மன்ற தீர்மான எண். 336 நாள் 27.06.2014 – ன் படியும் மற்றும் நகர மன்ற தீர்மான எண். 426 நாள். 31.10.2014 படி 20.01.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் நகரமன்ற தீர்மான எண் 469 நாள் 27.02.2015 ன் படி திரு. P. ஜெயச்சந்திரன் அவர்களின் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி 4.95% ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டது . மதிப்பீட்டை விட கூடுதல் செலவு ரூ. 9,75.307/– நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டதை மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது..

அலுவலககுறிப்பு. மன்றம் அங்கீகரிக்கலாம் . .
(ந.க.எண் . 1416/2014/இ1)
**<u>தீர்மான எண் : 84 அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள். 3.</u>** சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி மண்டல இயக்குநர் , செங்கல்பட்டு அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்ததின் அடிப்படையில் நகராட்சி வார்டுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை அந்த பகுதியில் உள்ள பொது இடங்களில் On Site Composting செய்ய அறிவுறுத்தலின் பேரில் கீழ் கண்டுள்ள இடங்களில் On Site Composting ஏதுவாக MMC சென்டர்கள் அமைக்க மதிப்பீடுகள் தயார் செய்து பணியை மேற்க்கொள்ளவும் மற்றும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக பின்புறம் 1 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி ( வார்டு எண்.8,9,22,23) | 4.40 |
| 2 | மாருதி நகர் பூங்காவில் 0.50 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி ( வார்டு எண். 24,25) | 2.40 |
| 3 | விஸ்வநாதபுரம் 0.50 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி ( வார்டு எண். 1) | 2.40 |
| 4 | வான்பாக்கத்தில் 0.50 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி ( வார்டு எண். 2 ) | 2.40 |
| 5 | முள்ளிகிராம்பட்டில் 0.50 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி ( வார்டு எண். 3 ) | 2.40 |
| 6 | சோழவல்லி சுடுகாட்டில் 0.50 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி ( வார்டு எண். 11 Part ,12 ) | 2.40 |
| 7 | லட்சுமி நாராயணன் நகர் பூங்காவில் 0.50 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி ( வார்டு எண். 13 Part , 14 ) | 2.40 |
| 8 | கைலாசநாதர் கோயில் தெரு 2காமராஜ் நகர் பூங்காவில் 0.50 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி ( வார்டு எண். 7 , 11 Part ) | 2.40 |

| | | |
|---|---|---|
| 9 | சத்திய நாராயணன் நகர் பூங்காவில் 0.50 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி (வார்டு எண். 26 , 27 ) | 2.40 |
| 10 | தனலட்சுமி நகர் பூங்காவில் 0.50 TPD கொள்ளவு கொண்ட On Site Composting Centre அமைக்கும் பணி (வார்டு எண். 15 ,16 ) | 2.40 |

அலுவலககுறிப்பு:- . மன்றம் அனுமதிக்கலாம் .
(ந.க.எண் . 2019/2018/இ1)
<u>**தீர்மான எண் : 85 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**</u>

<u>**மன்றபொருள்.4.**</u> நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 30 நாள். 01.02.2018 ன்படி 28.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட குடிநீர் பகீர்மான குழாயில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் மின் மோட்டார் ஆகியவற்றில் ஏற்படும் பழுதினை சீர் செய்து பராமரித்தல் பணி. | 8.50 | M/s.அருணாச்சல அசோசியேட் | **0.30%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.K.N.முருகன் | **1.88%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u>1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.30%** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . M/s.அருணாச்சல அசோசியேட் ஒப்பந்ததாரர்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் . 0518/2018/இ1)
<u>**தீர்மான எண் : 86 அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது .**</u>

<u>**மன்றபொருள். 5.**</u> 2018–2021 ஆம் ஆண்டு மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 27.03.2018 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டதில் , நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தினுள் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தின் உரிமத்திற்கு மட்டும் கீழ் கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொது ஏலம் கோரியவரின் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.எஸ் . சாந்தகுமார் த/பெ. சிவகொழுந்து<br>35 , சின்னத்தெரு , வான்பாக்கம் ,நெல்லிக்குப்பம் | ரூ.45000/– |

| | | |
|---|---|---|
| 2 | திரு. எஸ் . சேகர்<br>**99/1** , கில்பேட் (பி.ஏ.எச் ரோடு ),<br>நெல்லிக்குப்பம் | – |
| 3 | திரு. ஜெ . சோமசுந்தரம்<br>**43/68** , அண்ணா நகர் ,<br>நெல்லிக்குப்பம் | ரூ.**46000/–** |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> 1. வரிசை எண். 3ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் திரு. ஜெ . சோமசுந்தரம் **43/68** , அண்ணா நகர் , நெல்லிக்குப்பம் என்பவர் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கேட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . **0518/2018/இ**1)

**<u>தீர்மான எண் : 87 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள். 6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கே.எஸ். ஏ.ஆர்.ரோடு , பி.ஏ.எச்.ரோடு , அருங்குணம் சாலை , பண்ருட்டி – கடலூர் சாலை மற்றும் முக்கிய சாலைகளில் அரசியல் கட்சிகள் , முக்கிய பிரமுகர்கள் , திருமணங்களின் பேனர்கள் போன்றவை அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ளது.

நகரில் எங்கெங்கு பேனர் போன்ற விளம்பரங்கள் உள்ளன என்கிற விவரத்தினை ஒரு தனியார் நிறுவனம் மூலம் வீடியோ கவரெஜ் எடுக்க மாவட்ட ஆட்சியர் ஆட்சியர் கூட்டத்தில் அறிவுரை வழங்கியதின் பேரில் வீடியோ மற்றும் போட்டோ எடுக்கவும் மேலும் , அதற்கு தோரய செலவினமாக ரூ . **30000/–** ஒப்புதல் செய்யலாம்.

அலுவலககுறிப்பு. முக்கிய சாலைகளில் உள்ள விளம்பரங்களை படம் பிடித்து கொடுக்க தனியார் நிறுவனங்களிடம் குறைவான விலைப்புள்ளி கோரலாம் . மன்றம் அங்கீகரிக்கலாம் . . அதற்கு தோரய செலவினம் ரூ . **30000/–** பொது நிதியில் செலவு செய்ய ஒப்புதல் செய்யலாம்.

(ந.க.எண் . 1362**/2018/எப்1)**

**<u>தீர்மான எண் : 88 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள். 7.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் தினந்தோறும் குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்கள் LiQuid chlorine system அமைக்கப்பட வேண்டும் என தெரிவித்ததின் அடிப்படையில் நகராட்சி அலுவலகம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் ஜம்புலிங்கம் பூங்கா மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் LiQuid chlorine கலப்பதற்கு ஏதுவாக நான்கு LiQuid chlorine system அமைக்க தயாரிக்கபட்டுள்ள மதிப்பீடு ரூ.**65,000/–** க்கும் செலவை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு : –</u> மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண் . **0518/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 89 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.